**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 27/2023**

**வாதி தரப்பு சாட்சி-1 ராஜேந்திரன் - திருமதி.எஸ்.கோமதி** பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 05.08.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேந்திரன் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | லேட்.தங்கராசு | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 48 |

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | |
|---|---|---|
| 1. | 19.12.1991 ம் தேதியிட்ட கிரைய ஆவணம் (5 பக்கங்கள்) - அசல் | வா.சா.ஆ.1 |
| 2. | 04.07.2016 ம் தேதியிட்ட தங்கராசு இறப்பு சான்றிதழ் - உண்மை நகல் | வா.சா.ஆ.2 |
| 3. | 05.09.2017 ம் தேதியிட்ட தங்கராசு வாரிசு சான்றிதழ் - உண்மை நகல் | வா.சா.ஆ.3 |
| 4. | 14.12.2023 ம் தேதியிட்ட பட்டா எண்கள் 376, 451 மற்றும் 216 – கணினி நகல்கள் | வா.சா.ஆ.4 |
| 5. | நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் | நீ.ம.சா.ஆ.1 மற்றும் 2 |
| 6. | நில அளவையர் வரைபடம் | நீ.ம.சா.ஆ.3 |

நீ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் பிரதிவாதி தரப்பில் நீதிமன்ற ஆணையர் மூலமாக குறியீடு செய்யவேண்டும் என ஆட்சேபனை செய்யப்பட்டு, ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது.

(வேண்டுகோளுக்கிணங்க கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**